**மனன வசனம்**

அவர்
உங்களை
விசாரிக்கிறவரான
படியால், உங்கள்
கவலைகளையெல்லாம்
அவர்மேல்
வைத்துவிடுங்கள்.
1பேதுரு 5:7.

**ஆராய்ச்சிக்கு**

1பேதுரு 5:1-10;

அப் 6:1-6;

எரே 10:21;

மத்தேயு 20:24-28;

நீதி 3:34;

வெளி 12:7-9.

மே 6 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

# பணியாள் தலைமைத்துவம்

வளருகிற சபைகளைக் குறித்த ஆராய்ச்சிகளை எடுத்துக்கொண்டால், திறமையான தலைமைத்துவத் துவத்தின் அவசியம்தான் எப்போதுமே வலியுறுத்தப் படுகின்றது. தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் தேவ னிடமிருந்தும் அவருடைய வார்த்தையிலிருந்தும் தரி சனத்தைப் பெறுவார்கள்; நற்செய்தி ஊழியக்கட்ட ளையை நிறைவேற்றும்படி சபையிலுள்ள ஒவ்வொரு வரும் தங்கள் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்த வாய்ப்புகளை உருவாக்குவார்கள்.

ஆனால் சபை தலைமைத்துவம் சவால்நிறைந்த ஒன்று. ஏற்கனவே வேறு வேலைகளைச் செய்து, நேரமே இல்லாமல் இருக்கும் தன்னார்வலர்கள்தாம் பெரும்பாலும் சபைகளை நடத்துகிறார்கள். சபையில் ஏதாவது நிகழ்ந்துவிட்டால், சபைக்கு வருவதை நிறுத்தி விடுவார்கள்; அவர்களது ஆதரவும் நின்றுபோகும். மேலும், திறமையான ஒரு கிறிஸ்தவ தலைவர் ஆழமான ஆவிக்குரிய வாழ்க்கை உடையவராகவும் இருக்கவேண் டும். ஏற்கனவே உபத்திரவத்தைச் சந்தித்துவந்த சபை களுக்குத்தான் பேதுரு எழுதுகிறார். அக்காலக்கட்டங் களில் சபைத்தலைவர் பெரும் ஆபத்துக்குள்ளாகும் சூழ் நிலை இருந்தது. அப்படியானால், இந்தப் பொறுப்புக்கு யார் தகுதியானவராக இருப்பார்?

உள்ளூர்ச் சபையளவில் சபைத்தலைமை எப்படி இருக்கவேண்டுமென 1பேதுரு 5:1-10இல் பேதுரு கூறு கிறார். உள்ளூர்ச்சபையின் தலைவர்களிடம் மட்டுமல்ல, சபையின் அங்கத்தினர்களிடமும் காணப்படவேண்டிய சில முக்கியக் குணநலன்கள்பற்றி இவ்வசனங்களில் அவர் எழுதுகிறார். அன்று அவருடைய வார்த்தைகள் எந்த அளவுக்கு பொருத்தமானவையாக இருந்தனவோ, அந்த அளவுக்கு இன்றைக்கும் பொருத்தமானவையாக இருக்கின்றன.

*2017, மே 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## ஆதிகால சபையில் மூப்பர்கள்

***ஆதிகாலச் சபையில் காணப்பட்ட சவால்களையும், அதன் தலைவர்களுடைய பங்கையும்பற்றி பின்வரும் வசனங்கள் வெளிப்படுத்துவது என்ன? அப் 6:1-6; 14:23; 15:6; 1தீமோ 5:17; 1பேதுரு 5:2.***

அதிகமானோர் இயேசுவை ஏற்றுக்கொண்டு, சபையில் சேருவது தேவனுடைய மிகப்பெரிய ஓர் ஆசீர்வாதம். ஆனாலும் ஆதிகாலக் கிறிஸ்தவர்களின் அனுபவம் காட்டுவதுபோல, வேகமான வளர்ச்சியில் பிரச்சனைகளும் உண்டு.

உதாரணமாக, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் அநேகர் மனம் மாறி கிறிஸ்தவர்களானதை அப் 1-5ல் வாசிக்கிறோம். அதன் விளைவை அப் 6: 1-6ல் வாசிக்கிறோம்: கூட்டம் பெரிதாகியது; தலைவர்களால் நிர்வகிக்கமுடியவில்லை; சபையின் அன்றாடச் செயல்பாடுகளைக் கவனிக்கத் தேவையான ஒழுங்குகளைச் செய்யவேண்டியிருந்தது.

சபை நிர்வாகத்தின் பெலவீனத்தை அதிகம் வெளிக்காட்டியது பாகுபாடு பார்க்கப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டு. அன்றாட பந்தியில் தங்களது விதவைகள் ஒழுங்காக விசாரிக்கப்படவில்லையென கிரேக்க மொழி பேசுவோர் குற்றஞ்சாட்டினார்கள். எனவே, சபையின் ஆதாரங்களை நிர்வகிக்கும் பணியில் 12 அப்போஸ்தலர்களோடுகூட சபையின் உதவிக்காரர்களென சிலர் நியமிக்கப்பட்டார்கள்.

ஆதிகாலச் சபையை ஒரு விசேஷித்த விதத்தில் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தினார். இருந்தபோதிலும், சபையை ஒழுங்கமைக்க வேண்டிய அவசியமிருந்தது. மூப்பர்கள் என்றழைக்கப்பட்ட சபைத்தலைவர்களை உடனடியாக நியமித்தார்கள்; ஒவ்வோர் உள்ளூர்ச் சபையிலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். இயேசுவைப்பற்றிக் கேள்விப்படாத இடங்களுக்கு ஊழியம்செய்யும்படிச் சென்றபோது, அங்கு புதிதாகக் கூடிவந்த கிறிஸ்தவர்களை வழிநடத்த மூப்பர்களை நியமிப்பது பவுல் மற்றும் பர்னபாவின் வழக்கமாக இருந்தது. அப் 14:23.

ஆதிகாலக் கிறிஸ்தவர்கள்மத்தியில் மூப்பர்களுக்கு பல்வேறு பணிகள் கொடுக்கப்பட்டிருந்தன. உள்ளூர்க் கிறிஸ்தவ சமுதாயத்தின் தலைவர்களாக அவர்கள் இருந்ததால், புதிதாக மனம்மாறினவர்களுக்கு அவ்வப்போது போதிப்பவர்களாகவும் அவர்கள் செயல்பட்டார்கள். பிரசங்கம்செய்தார்கள்; சபைமக்களின் நலனை முன்னிட்டு தேவையானவை செய்யப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தினார்கள். அப் 15:6; 1தீமோ 5:17; 1பேதுரு 5:2.

சபையின் எல்லா விஷயங்களிலும் உங்களால் ஒத்துப்போகமுடியாமல் இருக்கலாம்; ஆனாலும் உங்கள் சபையின் தலைவர்களோடு சேர்ந்து என்னென்ன வழிகளில் எல்லாம் நீங்கள் ஊழியம் செய்யமுடியும்?

***சபையில் பங்காற்றும் தலைவர்களிடம் காணப்படவேண்டிய குணநலன்கள் என்ன? 1பேதுரு 5:1-4. சபையில் நம் பங்கு என்னவாக இருந்தாலும், இந்த நியதிகள் எவ்வாறு நமக்கும் பொருந்தும்?***

---

தன்னையும் ஒரு சகமூப்பனாக அறிமுகப்படுத்திவிட்டு, மூப்பர்களுக்கான தன் அறிவுரைகளை பேதுரு தொடங்குகிறார். பிறகு, தன்னைப்பற்றி இரண்டு விஷயங்களைக் குறிப்பிடுகிறார்: கிறிஸ்துவின் பாடுகளைக் கண்ட சாட்சிகளில் ஒருவன்; இனி வெளிப்படும் மகிமையில் பங்கடைய காத்திருப்பவர்களில் ஒருவன். ஒரு மூப்பனில் காணப்படவேண்டிய முதல் குணநலன் என்னவென்பதை பேதுரு இங்கு வலியுறுத்துகிறார். அதாவது, நமக்காக கிறிஸ்து பட்ட பாடுகளின் முக்கியத்துவத்தையும், அவர் கொடுக்கும் மாபெரும் நம்பிக்கையையும் மூப்பன் அறிந்திருக்கவேண்டும்.

ஒரு மூப்பனானவன் தேவனுடைய மந்தையை மேய்க்கும் ஒரு மேய்ப்பனென்று பேதுரு கூறுகிறார். சபையை ஆடுகளுக்கு அவர் ஒப்பிடுவதால், சபை அங்கத்தினர்கள் சிலசமயங்களில் தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளவும் வாய்ப்புள்ளதைத் தெரிவிக்கிறார். எனவே, மீண்டும் அவர்களை மந்தைக்குள் வழிநடத்தவும், மற்ற ஆடுகளோடு இசைந்து செயலாற்றவைக்கவும் அவர்களுக்கு ஒரு மேய்ப்பன் அவசியம். ஒரு கிறிஸ்தவர் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்று ஓர் எளிய முன்னுதாரண வாழ்க்கை வாழ்கிறவனாகவும் மூப்பன் இருக்கவேண்டும்.

***எரே 10:21; எசே 34:8-10; சக 11:17 ஆகிய வசனங்களில் மேய்ப்பர்களுக்குக் கொடுக்கப்படும் எச்சரிப்பு என்ன?***

மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை பொறுமையுடன் நடத்துவதுபோல, தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் சபை மக்களை நடத்தவேண்டும். இயேசுவைப் பற்றியும், அவருக்குள்ளான இரட்சிப்புபற்றியும் அறியவேண்டியவர்களுக்கு அவரை அறிவிக்கவும், அவரைத் தொழுதுகொள்ளச் செய்யவும் மக்களை ஒன்றுகூட்ட மூப்பர்கள் அன்போடு பிரயாசப்படவேண்டும்.

மூப்பர்கள் கண்காணிகளாக ஊழியம்செய்யும்போது, அதைக் கட்டாயமாக அல்லாமல் மனப்பூர்வமாகச் செய்யுமாறு பேதுரு கூறுகிறார். சபையில் தலைமைப் பொறுப்புகளின் சவால்களை ஏற்றுச் செயல்பட ஆயத்தமாயிருப்பவர்களைக் காண்பது எளிதல்ல. நிர்வாகக் குழு தேர்வின் சமயத்தில் இதை நாம் காணமுடியும். ஒரு சபை சிறப்பாகச் செயல்பட தனித்துவமான பல பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றவேண்டும். தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்க பலர் தயங்குவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். சில பொறுப்புகள் நேரம் செலவிட்டு செய்யவேண்டியவையாக இருக்கும்; அதற்கு தகுதியானவர்களோ ஏற்கனவே நேரம் இல்லாத அளவுக்கு பரபரப்பாக இயங்குகிறவர்களாக இருக்கலாம். அத்தகைய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள தாங்கள் இன்னும் ஆயத்தப்படவில்லையென வேறு சிலர் நினைக்கலாம். ஆனால், அந்தப் பொறுப்புகள் தேடிவரும்போது, அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருப்பவர்கள், மனதார அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றே பேதுருவின் வார்த்தைகள் தெரிவிக்கின்றன.

## சேவக தலைமைத்துவம்

***கிறிஸ்தவ தலைமைத்துவத்தில் காணப்படவேண்டிய என்ன முக்கிய நியதிகளை 1பேதுரு 5:3; மத் 20:24-28 ஆகிய வசனங்களில் காணமுடிகிறது?***

---

---

1பேதுரு 5:3ல் உள்ள ஒரு முக்கிய கிரேக்க வார்த்தை **கடகுரியோன்டஸ்**; மத் 20:25லும் இதே வார்த்தை வருகிறது; 'அதிகாரம்செலுத்துதல்', 'அடக்கியாளுதல்' என்று அர்த்தம். எனவே, 'உங்கள் கட்டுப்பாட்டில் இருப்பவர்களை அடக்கியாளாதீர்கள்' என்று பேதுரு மூப்பர்களை அறிவுறுத்துகிறார்; மத் 20:25ல் இயேசு சொன்ன வார்த்தைகளை அவை பிரதிபலிக்கின்றன.

மத் 20:24-28ல் இயேசு அவ்வாறு சொன்னதின் பின்னணி மத் 20:20-23ல் உள்ளது. இயேசு தம்முடைய ராஜ்யத்தில் வரும்போது தன்னுடைய குமாரர்களில் ஒருவன் இயேசுவின் வலதுபாரிசத்திலும், மற்றவன் அவரது இடதுபாரிசத்திலும் உட்கார அருள்செய்யவேண்டுமென்கிற வேண்டுகோளோடு யாக்கோபு- யோவானின் தாயார் அவரை அணுகினார்.

'தங்கள் சகோதரர்களுக்குமேலாக முன்னுரிமையை விரும்பின அவர்களுடைய சுயநலத்திற்காக இயேசு அவர்களைக் கடிந்துகொள்ளவில்லை; கனிவோடு சகித்துக்கொண்டார். அவர்களுடைய இருதயங்களை வாசிக்கிறார்; தங்களிடம் எவ்வளவு ஆழமாக ஈடுபாடுகொண்டுள்ளார்கள் என்பதை அறிகிறார். அவர்களுடைய அன்பு வெறும் மனிதபற்றில்லை; மனிதவாழ்வின் சுபாவத்தால் அது தீட்டுப்பட்டிருந்தாலும் அவருடைய சொந்த மீட்பின் அன்பிலிருந்து பொங்கிவருவதாக அது இருந்தது. அவர் கடிந்துகொள்ளவில்லை; மாறாக, அதை மேலும் ஆழமாக்கி, சுத்திகரிப்பார்.' - *EGW, DA, p 548.*

தமது அருகில் அமரும் பாக்கியத்தை அருளுகிறவர் பிதாவென்றும், அது தாம் செய்யக்கூடியது ஒன்றல்லவென்றும் இயேசு விவரிக்கிறார். பிறகு, தம்முடைய ராஜ்யத்திற்கும் பிற தேசத்தாருக்கும் இடையேயான ஒரு முக்கிய வித்தியாசம், தம்முடைய ராஜ்யத்தில் தலைவனாக இருப்பவன் எப்படி நடந்து கொள்வான் என்பதில்தான் காணப்படும் என்கிறார். இயேசு ராஜாவாக இருக்கும் ராஜ்யத்தில் தலைவனாக இருக்க விரும்புகிறவர்கள் வேலைக்காரர்களாக வேண்டும்; ஏனெனில், இயேசுவின் ராஜ்யத்திலுள்ள தலைவர்கள் இயேசுவைப் போல இருப்பார்கள். 'மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.' மத்தேயு 20:28.

எனவே, சபைத்தலைவர்களும் அப்படியே இருக்கவேண்டுமென்று பேதுரு அழைக்கிறார்: இயேசுவில் காணப்பட்ட அதே அர்ப்பணிப்பும் சுயமறுப்பும் அவர்களில் காணப்படவேண்டும்.

பிலி 2:4-8ல் பவுல் சொல்வது எவ்வாறு பேதுரு எழுதுவதோடு ஒத்துப்போகிறது? முக்கியமாக, அந்த வசனங்களில் சொல்லப்படுவதுபோல நடந்துகொள்ள நாம் என்ன செய்யலாம்?

பேதுரு வாழ்ந்த பண்டைய கால சமுதாயத்தில், அந்தஸ்தின் அடிப்படையில் பல பிரிவுகள் இருந்தன. அதிகாரவர்க்கத்தினர் 'ராஜதோரணையோடு' காணப் பட்டார்கள். அவர்களைச் சுற்றிலும் அந்தஸ்தில் குறைந்தவர்களும், அடிமைகள் போன்ற அடிமட்டத்தினரும் கூட்டமாக வாழ்ந்தார்கள். மேல்வர்க்கத்தினருக்கு முன்னால் அடிமட்டத்தினர் தாழ்மையோடு நடந்துகொள்வதுதான் சரியான முறையாக இருந்தது. மனத்தாழ்மை என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு 'பெல வீனமான', 'குறைந்த', 'முக்கியமற்ற', 'ஏழையான' என்று பொருள். சமுதா யத்தில் அந்தஸ்தும் அதிகார மும் இல்லாதவர்களைதான் இப்படிச் சொல்லுவோம். யூதமார்க்கத்திற்கும் கிறிஸ்தவமார்க்கத்திற்கும் வெளியே தாழ்மை என்கிற சொல் அடிமட்ட அந்தஸ்தினரைத்தான் சுட்டிக்காட்டியது; தாழ்மையாக நடப்பது சுதந்தர மக்களின் சரியான நடத்தையாகவும் போற்றப்படவில்லை.

***அப்போது மக்கள் வாழ்ந்த சூழ்நிலையையும், பின்னணியையும் வைத்துப் பார்க்கும்போது, 1பேதுரு 5:5-7ல் பேதுரு எழுதுவது எவ்வாறு குறிப்பிடத்தக்க ஒன்றாக இருக்கிறது?***

பேதுரு வாழ்ந்த காலக்கட்டத்திலும் கலாச்சாரத்திலும் இருந்ததைவிட வேறு விதமான தாழ்மையை வேதாகமம் சொல்கிறது. கிரேக்க பழைய ஏற்பாடான செப்டூ வஜிண்டில் சொல்லப்பட்டுள்ள நீதி 3:34ஐ பேதுரு மேற்கோள் காட்டுகிறார்; அந்த வசனம் யாக் 4:6லும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில், அகந் தைக்காரர்களையும் பராக்கிரமசாலிகளையும் அடக்குவது தேவனுடைய கிரியை யின் ஒரு பகுதியாக இருந்தது. ஏசா 13:11; 23:9; யோபு 40:11.

தேவனிடம் நடந்துகொள்ளவேண்டிய சரியான மனநிலைகளில் ஒன்று தாழ்மை. 'ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.' 1பேதுரு 5:6. தேவனோடான உறவில் மட்டு மல்ல, மற்றவர்களோடான கிறிஸ்தவ உறவில் பெருமை அல்ல, தாழ்மையே காணப்படவேண்டும். 1பேதுரு 5:5.

தேவகிருபையால் தாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதை கிறிஸ்தவர்கள், ஏன் கிறிஸ்தவ தலைவர்களும் நன்கு அறிவார்கள். இதன்படி நாம் அனைவரும் சமம் தான்; சிலுவைக்குமுன் நம்மை நாம் தாழ்த்தவேண்டும். மற்றவர்களோடான உற வில், விசேஷமாக நம்முடைய கட்டுப்பாட்டில் இருப்பவர்களோடான உறவில் இந்தத் தாழ்மை வெளிப்படவேண்டும். வானங்களையும் பூமியையும் படைத்த தேவனுக்குமுன்பாக எவரும் தங்களைத் தாழ்த்தமுடியும். நமக்கு மேலானவர் களுக்குமுன்பாகவும், நம்மேல் அதிகாரமுள்ளவர்களுக்குமுன்பாகவும், நம்மை விட 'உயர்ந்த' அந்தஸ்தில் இருப்பவர்களுக்குமுன்பாகவும் நம்மைத் தாழ்த்து வது எளிதுதான். நமக்குக் 'கீழ்' இருப்பவர்களிடமும், நம்மேல் எந்த அதிகார மும் இல்லாதவர்களிடமும் தாழ்மை காட்டுகிறோமா என்பதுதான் உண்மையான சோதனையே. அப்படிப்பட்ட தாழ்மைபற்றியே பேதுரு பேசுகிறார்.

சிலுவையும் அது சுட்டிக்காட்டுவதும் எவ்வாறு நம்மை எப்போதும் தாழ்மையோடு இருக்கச் செய்யவேண்டும்?

# கர்சிக்கிற சிங்கம்போல

உபத்திரவத்தைப் பின்னணியாக வைத்தே பேதுரு எழுதினாரெனப் பார்த்தோம். மாபெரும் போராட்டத்தை வெறும் புத்தகக் கருத்தாகமட்டும் அவருடைய வாசகர்கள் அறிந்திருக்கவில்லை; நம்மில் அநேகர் கண்டிராத ஒருவிதத்தில் அதை அவர்கள் அன்று அனுபவித்து வந்தார்கள்.

***தீமையின் தோற்றம்பற்றியும், நம் உலகில் சாத்தான் கிரியைசெய்வது பற்றியும் 1பேதுரு 5: 8-10; வெளி 12:7-9 ஆகிய வசனங்கள் என்ன கூறுகின்றன?***

---

---

நன்மையின் சேனைகளுக்கும் தீமையின் சேனைகளுக்கும் இடையேயான அனைத்துலக போராட்டத்தில் கிறிஸ்தவர்கள் ஒரு முக்கியப் பங்காற்றுவதை வெளிப்படுத்தல் புத்தகம் வெளிப்படுத்துகிறது. நன்மையின் சேனைகளை வழிநடத்துகிறவர் இயேசு; அவர் தேவனுடைய வார்த்தை; ராஜாதி ராஜா; கர்த்தாதி கர்த்தா. வெளி 19:13,16. தீமையின் சேனைகளை வழிநடத்துகிறவன் பிசாசு; அவன் சாத்தானென்றும் அழைக்கப்படுகிறான்; ஒரு வலுசர்ப்பம்போல சித்தரிக்கப்படுகிறான். வெளி 12:7-9; 20:7,8. சாத்தான் ஒருவன் இருப்பதை பிரபல ஊடகமும், சில கிறிஸ்தவர்களும் மறுத்தாலும் பிசாசு சக்திவாய்ந்தவன், நமக்கு தீமைசெய்வதேயே நோக்கமாகக் கொண்டவன் என்பதே உண்மை. ஆனாலும், முடிவில் சாத்தான் நித்தியமாக அழிக்கப் படப்போகிறான் என்பதே நற்செய்தி. வெளி 20:9,10.

சாத்தான் எவ்வளவு பயங்கரமானவன் என்பதை பேதுரு கொஞ்சமும் குறைத்து மதிப்பிடவில்லை. யாரையெல்லாம் பட்சிக்கமுடியுமென கர்ச்சிக்கிற சிங்கம்போல பிசாசு சுற்றிக்கொண்டிருக்கிறான். 1பேதுரு 5:8. அப்போது தங்களுக்கு நேர்ந்துவந்த உபத்திரவத்தில்தானே பிசாசின் வல்லமை வெளிப்பட்டதை தன் வாசகர்களுக்கு பேதுரு சுட்டிக்காட்டுகிறார். ஆனாலும் இந்த உபத்திரவமானது நித்திய மகிமையைக் கொண்டுவரும். 1பேதுரு 5:10.

***1பேதுரு 5:10ஐ மீண்டும் வாசியுங்கள். பேதுரு சொல்வது என்ன?***

---

அவர்கள் எப்படிப்பட்ட பாடுகளைச் சந்தித்து வந்தார்களென நமக்குத் தெரியாது; ஆனால், பேதுரு எப்படிப்பட்ட நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுக்கிறார் என்பது தெரிகிறது. ஆம், பிசாசு இருப்பது நிஜம்தான். யுத்தம் நிஜமானது; நம் உபத்திரவங்களும் நிஜமானவை. ஆனால், 'சகல கிருபையும் பொருந்திய தேவன்' பிசாசைத் தோற்கடித்திருக்கிறார். எனவே, நம்முடைய உபத்திரவம் என்னவாக இருந்தாலும், நாம் உண்மையோடு இருந்தால், மரணபரியந்தம் உண்மையோடு இருந்தால் வெற்றி நிச்சயம். எபி 11:13-16. இயேசுவுக்கே ஸ்தோத்திரம்.

நம் பாதையில் என்ன நேரிட்டாலும், கடைசிமட்டும் நம்முடைய விசுவாசத்தில் நாம் நிலைத்திருப்பதற்கு நாம் என்ன செய்யலாம்?

பணியாள்தலைமைத்துவத்திற்கு மிகச்சிறந்த ஓர் எடுத்துக்காட்டை இராப்போஜன விருந்தில் நாம் காணலாம். தாம் யாரென்றும் (தேவகுமாரன்), தாம் தம் பிதாவிடம் திரும்பிச் செல்லவிருந்ததையும் இயேசு முற்றிலும் அறிந்திருந்தார். யோவான் 13:1. போஜனம் முடிந்ததும் சீடர்களின் கால்களைக் கழுவினார். பிறகு அவர், 'ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்' என்றார். யோவான் 13:14,15. இயேசுவின் பிள்ளைகள் கால்கழுவும் ஆராதனையில் பங்கெடுக்கும் போதெல்லாம் இந்தக் காட்சியை நினைவுகூருகிறார்கள்; இயேசுவின் ராஜ்யத்தில் தலைவனாக இருப்பதற்கு ஒருவன் ஓர் ஊழியக்காரனாக வேண்டும் என்பதையும் நினைவுகூருகிறார்கள். சீடர்கள் தாங்கள் உயிரோடிருந்த காலம் முழுவதும், இயேசு மெய்யாகவே யாரென்பதை நன்றாக அறிந்திருந்தவர்களாக, தங்கள் எஜமான் செய்த மனத்தாழ்மையின் இந்தப் பணிவிடையை நினைவுகூர்ந்தார்கள். பேதுருவும்கூட சபை மூப்பர்களிடம் இறுமாப்பாய் ஆளாமால், 'மனத்தாழ்மையை அணிந்துகொள்ளும்படி' சொன்னபோதும் இதைத்தான் மனதில் வைத்திருந்திருக்க வேண்டும்.

"மனிதனாகப்பிறக்கதீர்மானித்ததில், பரலோக அறிவுஜீவிகளே ஆச்சரியப்படுமளவிற்கு ஒரு தாழ்மையை கிறிஸ்து வெளிப்படுத்தினார். கிறிஸ்து முன்னரே மிகமேலான நிலையில் இல்லாதிருந்தாரானால், ஒரு மனிதனாகப் பிறக்க அவர் சம்மதித்தது தாழ்மையான ஒரு செயலாக இருந்திருக்காது. மனிதனை அவன் இருக்கிற இடத்திலேயே சந்திக்கவும், அவர்கள் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக மாறுவதற்கான ஒழுக்கத்திறனை மனித குடும்பத்திற்குப் பெற்றுத்தரவும் அவர் தம் ராஜ வஸ்திரத்தையும், ராஜ கிரீடத்தையும், உயர் பதவியையும் உதறிவிட்டு, தம் தெய்வதன்மையோடு மனிததன்மையைத் தரித்தார்.

"கிறிஸ்துவின் வாழ்க்கையில் காணப்பட்ட சாந்தமும் மனத்தாழ்மையும் 'அவர் நடந்தபடியே நடப்பவர்களின்' வாழ்க்கையிலும் குணத்திலும் வெளிப்படும்." – *EGW, SD, p 81.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *பிசாசின் சோதனைகளை எதிர்கொண்டபிறகு, இயேசு தம் ஊழியத்தை ஆரம்பித்தார். வேதவசனங்களைக் கொண்டு அவனுடைய சோதனைகளை மேற்கொண்டார். மத் 4:1-11; மாற்கு 1:12,13; லூக் 4:1-13. நாமும் நம் வாழ்க்கையில் பிசாசை எதிர்த்துநிற்க இதிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?*
2. *ஒருவரிடம் மெய்யான தாழ்மை காணப்படுவதாக எதை வைத்து அறிகிறீர்கள்? அதே தாழ்மை உங்களில் காணப்பட என்ன செய்யலாம்?*
3. *இவ்வார வசனங்களில் பேதுரு சொல்வதுபோக, ஒரு நல்ல கிறிஸ்தவ தலைவனின் வேறு குணநலன்கள் என்ன? கிறிஸ்தவரல்லாத தலைவர்களின் என்ன குணநலன்கள் இவற்றோடு ஒத்துப்போகின்றன? எவை வேறுபடுகின்றன?*
4. *சாத்தான் உண்மையானவன் அல்ல, மனித தன்மையில் காணப்படும் தீமையின் ஓர் அடையாளம்தான் என்று சொல்வோருக்கு உங்கள் பதில் என்ன?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.